செ.வெ.எண்.06 நாள்.03.10.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 01.01.2018 அன்று தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் செய்வதற்கான வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 01.01.2018 அன்று தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.10.2017) வெளியிட, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, 01.01.2018 அன்று தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது. 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியடைபவர்கள் இந்த வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பங்களை அளிக்கலாம். 05.01.2017 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் 2504884 வாக்காளர்கள் இருந்தனர். தொடர் திருத்தங்களின்போது, 19242 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இறப்பு மற்றும் இடம் மாற்றம், இரட்டைப் பதிவுகள் காரணமாக 7817 வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இன்று (03.10.2017) வெளியிடப்படும் வாக்காளர் பட்டியலில் ஆண் வாக்காளர்கள் 1238651, பெண் வாக்காளர்கள் 1277579 இதர வகையினர் 79 என மொத்தம் 2516309 வாக்காளர்கள் உள்ளனர். சுருக்கமுறை திருத்தம் தொடர்பாக 08.10.2017, 22.10.2017 ஆகிய இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் மனுக்களை அளிக்கலாம். சுருக்கமுறை திருத்தத்தின் போது பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் இதர திருத்தங்களையும் மேற்கொள்ளலாம். இன்று முதல் 31.10.2017 முடிய உள்ள காலங்களில் விண்ணப்பங்களை அளிக்கலாம். மேலும், தேர்தல் ஆணையத்தின் இணையதளமான www.nvsp.in மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

பொதுமக்கள் பார்வைக்கு வரைவு வாக்காளர் பட்டியல் வட்டாட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், வாக்காளர் பதிவு அலுவலகம், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சாவடி அமைவு இடங்களிலும் வாக்காளர்கள் பார்வையிடலாம். இந்த வாய்ப்பினை திருநெல்வேலி மாவட்ட பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.விஜயகுமார், தேர்தல் வட்டாட்சியர் திரு.சுகுமார் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.